(2)

புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்

❁ கும்மி ❁ காவடி

❁ தாலாட்டு ❁ வேறு

பாடல்கள்

ஆக்கம்,
கவிஞர் ஆரையூர் அருள்

19-05-2006

பதிப்புரிமை ஆசிரியருக்கே
திரு.மு. அருளம்பலம் (அதிபர்)
(ஆரையூர் அருள்)

"துளசிவாசம்"

ஆரையம்பதி - 01

ஆரையம்பதி.

புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி

கும்மிப்பாடல்கள்

தரு

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்
தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்

1. புன்னைச் சோலையிலே கோவில் கொண்டு
என்றுமே மக்களைக் காத்திருக்கும்
பத்திர காளிமேல் கும்மிபாட
அமிர்தகழி அப்பன் காப்பாமே

2. ஊரவர் ஒன்றாகக் கூடியன்று
ஓலைக் குடிசை அமைத்து அங்கு
நிலாவொளி போல விளங்கிய - காளிக்கு
விழாவெடுக்க கோவில் கட்டினரே

3. அம்பாள் புகுந்துருப் பெற்றவர்கள்
ஆலயபூசை வேளை தோறும்
அருளிய அருள் வாக்கு - என்றும்
அட்டதிக்கு மெட்டிப் பரவியதே.

4. ஆய்ந்தறிந்து வாக்கினுண்மை கண்டு
ஆழிவெள்ள மெனமக்கள் வர
காளிகோவில் வீதி அமைத்து - புதுப்
பாதையொன்று செப்பனிட்டனரே.

5. இவ்விதம் பூசையியற்றி வருங்காலை
இருடிகேசன் தங்கை காளியின்
படைக்கலம் பற்றிய திருடர் - கூட்டம்
நடுக்காட்டில் தடுமாறி நின்றனரே.

6. ஈதென்ன அதிசயம் என்று மக்கள்
கூடித் திருடர்களைப் பிடித்து
படைக்கலம் முழவதும் பறித்து - எடுக்க
நடைப் பிணமாக நாணித் தவித்தனரே.

7. உன்னுடை சன்னிதி உயர்வுபெற
ஊர்மக்கள் ஒற்றுமை உறுதியதே
எண்ணற்ற பக்தர்கள் இங்குவர - புன்னை
சோலைக் காளிபுகழ் பரவியதே.

8. ஊரவர் ஊழியம் செய்து நன்றாய்
ஊழியான் பாரிக்கு பூசையியற்ற
ஊழ்வினை போக்கி யுறுதுணையாய் - காளி
வேளைதோறும் காத்து வீற்றிருக்காள்.

9. எத்தனையோ காளிகோவில் ஈழமெங்கும்
மெத்த அமைந்திட்ட போதினிலும்
அத்தனைக்கும் மகுடமதாகவே - புன்னைச்
சோலைக் காளி மின்னுகின்றாள்.

10. ஏதிலார்க்கு கொடை கொடுக்கும்
ஏந்திழைகாளி யுனைப் பணிந்தால்
ஏழ்மை வாழ்வு ஓடிடவே - என்றும்
வாழ்வில் வளம்பெற்று வாழ்ந்திடலாம்.

11. ஐயையே மெய்யாக உன்கருணை
ஐயம் தெளிய அறிவதென்றால்
தையலே சற்றும் தயங்காதுன் - சன்னிதி
சார்வோ றறிந்து புரிந்து கொள்வார்.

12. ஒற்றுமையாய் நிருவாகிகள் கூடியே
பற்றுட னாலயப் பணிபுரியும்
வித்தகம் உத்தமி ஆலயத்தே - என்றும்
மிக்க சிறப்புடன் கண்டிடலாம்.

13. ஓங்காரரூபி பாங்குடனே பூசை
பூசகர் நின்று இயற்றும் முறை
பார்ப்பவர் உள்ளத்தே பக்திப்பூ - பூத்துமே
கூப்பித் தொழுவாருன் பாதமதை.

14. ஒளவையே பௌவியமாக வுன்னாலயம்
நெளவி விழியாலே நாடி வந்தோம்
ஒளடதமாக நீயிருந்து - எம்மை
சௌபாக்கியமாய் வாழ வைத்திடம்மா.

15. ஆழிப்பேரலையாய் ஊழ்வினை எங்களை
ஆவேசமாகத் துரத்திடிலும்
ஆழிமழைக் கண்ணன் தங்கையே - ஊழிப்
பேரழிவில் நின்று காத்திடம்மா.

16. கடகட என்ற சிரிப்போடும்
பளபளக்கும் படைக் கலத்தோடும்
தகதகக்கும் அங்க நிறத்தோடும் - வாடை
கமகமக்க காளீ உலாவருவாள்.

17. ஆண்டுதோறும் வரும் ஆனித்திங்கள்
ஒன்றுகூடிப் புன்னைச் சோலைமக்கள்
அன்னை காளிக்குச் சடங்கு - செய்ய
திண்ணமதாகத் தின முழைப்பர்.

18. ஞாயிறு திருக்கதவு திறக்க
ஆனி வெள்ளி காளி தீமிதிக்க
ஏற்ற ஒழுங்கு முறைகள் - எல்லாம்
ஏற்று நிருவாகம் செய்திடுமே

19. ஸ்ரீபத்திரகாளி எழுந்தருள
நித்திய கும்ப மடைகள் வைத்து
முக்கண்ணன் வெட்டிப் பலிகொடுக்க - காளி
மூலஸ்தான மேடைதானமர்வாள்.

20. மாரி, பேச்சி, காடேறி காக்கும்
காளிகலைகள் பத்தினிக்கும்
நாக தம்பிரான் நரசிங்க - வதன
வீரபத்திரர்க்கும் பூசையுண்டு.

21. ஆலாத்திப் பெண்களைத் தேர்ந்தெடுத்து
ஆராதனை செய்ய மனம் களித்து
காளியாத்தா கல்யாணக்கால் - வெட்டிட
ஆர்வமோ டமிர்தகழி புகுவார்.

22. வீதிதோறும் தோரணங்க ளீட்டு
வாழை கமுகோடு கன்னல் நட்டு
வாசல் தோறும் நிறைகும்பம் - வைத்து
மக்கள் நேசமோடு நிறைந்து நிற்பர்.

23. அபிடேக ஆராதனைகள் ஏற்று
அடியவர்க் கன்பாயருள் பொழிந்து
படிமுறையாக கல்யாணக்கால் - வெட்டியே
தலை சுற்றி ஆலயம் நாடிடுவாள்.

24. ஆடிவரும் தேவாதி களை
கூடியயலவர் கட்டுவதும்
நாடியே பூசாரி வெட்டுவதும் - தேடிக்
கற்ற மந்திரத்தின் வித்தகமே.

25. கல்யாணப்பூசை உச்சாடனங்கள்
துல்லியமாய்ப் பெற்றுக் காளிதேவி
உல்லாசமாக மனம் மகிழ்ந்து - அப்போ
சொல்லுவா நல்வாக்கு நல்லவர்க்கு.

26. பூசாரிகார் மந்திரம் செபித்து
பூசைவிதியுடன் உரல் நிறுத்தி
கன்னியரை நெல்குத்தவைக்க - கண்டு
விண்ணவர் பூமாரி தூவிடுவார்.

27. நின்றாடு குதிக்கை விநாயகர்க்கும்
புன்னைச் சோலைக் காளிஅன்னையர்க்கும்
செங்கரும்பு கனிவர்க்கமுடன் - மங்கள
பொங்கலும் பூசையும்தான்.

28. தீக்குழி முறைப்படி தானமைத்து
தேவாதிகட்கும் மடைகள் கட்டி
அம்பாளடையாளம் குழியில் வைத்து - காளி
பார்வையிலே தீ முட்டிடுவர்.

29. பாலர்களோடு விருத்தர்களும் சேர்ந்து
கோவில் சுற்றி யம்பாளுடனே
பத்திரம் கைப்பற்றி பக்தியோடு - சென்று
மஞ்சள் நீராடுவர் கடற்கரையில்.

30. மஞ்சள் நீராடி மகிழ்வுடனே
தஞ்சமென காளிதன்னை வேண்டி
அஞ்சோம் தாயேயென - தீமிதிக்க
பஞ்சாகப் பாதத்தை தாங்கிடுவாள்.

31. நாலாபுறமும் இருந்து வந்து
நாள் முழுதும் விரத மிருந்து
ஆயிரம் ஆயிரம் பக்தர் கூடி - அன்னை
ஆயிழை காளியின் தீமிதிப்பர்.

32. தீவளர்த்து தீ மிதிக்க என்றும்
தீதற்றவர்க்குத் தீக்குழியை
பூக்குழியாக பூக்கவைத்து - நாளும்
காத்தருள்வா கருமாரி காளி.

33. பூரணை நிலாப் பால்பொழிய
பூரணிகாளி அருள் நிறைய
ஆலயவீதி எங்கிலுமே - காளி
வாலாயமாகி வசிகரிப்பாள்.

34. மங்களமே வெற்றி மங்களமே
மாமாங்கேஸ்வரருக்கும் மங்களமே
மங்களமே சித்தி மங்களமே
சிங்கவாகினி காளிக்கும் மங்களமே.

35. மங்களமே சுபமங்களமே
மதிசூதனன் பாதம் மங்களமே
மங்களமே பெரு மங்களமே
புன்னைச் சோலைக் காளிபாதம் மங்களமே.

தூலாட்டு

தரு

ஆராரோ ஆராரோ ஆரிராரிரோ
தாலேலோ தாலேலோ தாலிலாலிலோ

1. புன்னைச்சோலை வீற்றிருக்கும் காளிகா தேவி
புன் முறுவல் பூத்து புன்மை தீர்ப்பா காளிகா தேவி
எண்ணத்தில் நின்றிடுவா காளிகா தேவி
என்றும் எம்மைக் காத்திடுவா காளிகா தேவி.

2. அமிர்தகழி ஆனைமுக வப்பன் காளிகா தேவி
உன் அன்புச் செல்வனல்லோ காளிகா தேவி
பௌர்ணமிப் பட்டொளிபோல் காளிகா தேவி
பரிணமிக்கும் கட்டழகி காளிகா தேவி.

3. மட்டுவாவி கிழக்கினிலே காளிகா தேவி
வங்கக் கடலோடு கைகுலுக்க காளிகா தேவி
சங்கத் தமிழ் காற்றலை பரவக் காளிகா தேவி
வாவி மீனினம் கானம் பாடும் காளிகா தேவி.

4. சந்தோசத்தால் வாவி மகளாடக் காளிகா தேவி
தலைவிருட்சம் சதிராடிக் காளிகா தேவி
தனைமறந்து பூப்பூக்குக் காளிகா தேவி
தேன் சொரிந் துன்னை அபிடேகிக்கும் காளிகா தேவி.

5. சோலைக் குயில் பாடல் கேட்டுக் காளிகா தேவி
தோகைமயி லாடுமம்மா காளிகா தேவி
காவினத்தின் கனிகளுண்டு காளிகா தேவி
கவியினங்கள் களித்தாடும்மா காளிகா தேவி.

6. காவியங்கள் முழங்குமோசை காளிகா தேவி
ஓவியமாய்ப் பதியுதம்மா காளிகா தேவி
பாடிடு பாராயணங்கள் காளிகா தேவி
ஆவிதொட்டு அழைக்குதம்மா காளிகா தேவி.

7. ஏதிலார்க்கு கொடை கொடுத்து காளிகா தேவி
என்றுமே காக்கும் தெய்வம் காளிகா தேவி
வாழையடி வாழையாகக் காளிகா தேவி
வம்சம் வளர வரமளிப்பா காளிகா தேவி.

8. சூதுசெய்யும் துரோகிகளை காளிகா தேவி
சூறாவளியாய்ச் சுழன்றழிப்பா காளிகா தேவி
காளி நீ கடுங்கோபங்கொண்டா காளிகா தேவி
ஆழிப் பேரலையாய் அடித்தொழிப்பா காளிகா தேவி

9. சனநாயகப்பூ பூக்கு மென்றார் காளிகா தேவி
பணநாயகப் பேய் காய்ப்பதென்ன காளிகா தேவி
போர்நிறுத்தப் பொய்ப் பொதியைக் காட்டி காளிகா தேவி
வேரோடின மழிக்கும் மர்மமென்ன காளிகா தேவி.

10. அருவியென்றும் கண்ணில் பெருகுவது காளிகா தேவி
அருவராகப் பிறந்த பாவமோடி காளிகா தேவி
கலிகாலம் என்பதாலோ காளிகா தேவி
மலிவாய் மனித மழிக்கின்றாரே காளிகா தேவி.

11. சாட்சியின்றிச் சதிகள் செய்யும் காளிகா தேவி
ஆட்சியாளர் சூட்சி கண்டும் காளிகா தேவி
மீட்சிபெற மார்க்கம் காட்ட காளிகா தேவி
ஆச்சியுனக்கு மனமில்லையோ காளிகா தேவி.

12. ஒட்டிவாழும் எட்டப்பர்கள் காளிகா தேவி
பட்டம்பதவி பெற்று வாழக் காளிகா தேவி
அட்டகாசம் செய்யசிங்கம் கண்டும் காளிகா தேவி
கொட்டமடக்க எட்டிவாடியம்மா காளிகா தேவி.

13. இத்தனை கொடுமை கண்டும் காளிகா தேவி
நித்திரை வருகு தோடி காளிகா தேவி
பித்தலாட்டப் பேய்களை ஓட்டிக் காளிகா தேவி
சத்தியத்தைக் காத்திடம்மா காளிகா தேவி.

14. ஐயமகற்றி மெய் வாழ்வைக் காளிகா தேவி
வைய முய்யத் தந்திடம்மா காளிகா தேவி
மாயப் பிணி களைமருந்தே காளிகா தேவி
காயங்குலை யுமுன் காட்சிதாம்மா காளிகா தேவி.

15. அஞ்சுகங்கள் அழகு மயில்கள் காளிகா தேவி
மிஞ்சும் பொழில் சூழ்ந்த பதி காளிகா தேவி
பஞ்சினடி விஞ்சு பாதத்தழகி காளிகா தேவி
தஞ்சமென்று சரணடைந்தோம் காளிகா தேவி.

16. திருவடி தேடிவந்து காளிகா தேவி
கருப்பூரம் திருநீறும் காளிகா தேவி
பொற்பூவும் குங்குமமும் காளிகா தேவி
பொலியுதடி உன்வீதியெங்கும் காளிகா தேவி.

17. அரசையோடு வேப்பயுரசக் காளிகா தேவி
பரவசப் பக்தியலை தாவிக் காளிகா தேவி
பக்தர் மனதுரசக் காளிகா தேவி
சித்தி வந்து சேருதடி காளிகா தேவி.

18. கல்யாணக் கால்வெட்ட காளிகா தேவி
துள்ளி நீ வருகையிலே காளிகா தேவி
தேரு ஓடி வருவது போல் காளிகா தேவி
ஊரு உன் பின்னால் வருகுமடி காளிகா தேவி.

19. அமிர்தகழி அப்பன் பதியும் காளிகா தேவி
அன்னைகாளி உந்தன் பதியும் காளிகா தேவி
கல்யாணக் கால்வெட்டு மிடமும் காளிகா தேவி
அமிர்தம் பொழி யமிர்தகழியே காளிகா தேவி.

20. அன்னையோடு பிள்ளையும் சேர்ந்து காளிகா தேவி
பின்னமறக் கோல தோட்சி காளிகா தேவி
உன்னத உபாயமளிப்பது காளிகா தேவி
எண்ண எண்ண இனிக்குதடி காளிகா தேவி.

21. தேவாதியை தந்திரத்தால் கட்ட காளிகா தேவி
வேதாந்தி மந்திரத்தால் வெட்டுவது காளிகா தேவி
ஓதும் மறை வித்தகத்தைக் காளிகா தேவி
உணர்த்து முன் விளையாட்டே காளிகா தேவி.

22. அற்புதத்தின் தற்பரியே காளிகா தேவி
விற்புருவ சொற்பணமே காளிகா தேவி
நற்றவத்தின் பொற்பதமே காளிகா தேவி
உற்ற துணை என்றும் முன்பதமே காளிகா தேவி.

23. சனநாயகப் போர்வைக்குள்ளே காளிகா தேவி
இனவாதிகள் பூந்ததாலே காளிகா தேவி
அனலிடை மெழுகாகக் காளிகா தேவி
மனமுருகித் தவிக்கின்றோமே காளிகா தேவி.

24. கொட்டும் மழையினிலும் காளிகா தேவி
சுட்டெரிக்கும் வெயிலினினும் காளிகா தேவி
சொந்தமண்ணில் அகதியாகிக் காளிகா தேவி
நொந்தழுது தவிக்கின்றோமே காளிகா தேவி.

25. உறவிழந்து உடமையிழந்து காளிகா தேவி
உயிர் பிழைக்க கடல் கடந்தா காளிகா தேவி
கடற்படை தடுத்து நிறுத்தும் சதி காளிகா தேவி
நடப்பதிந்த நாட்டில் தானே காளிகா தேவி.

26. உள்நாட்டு யுத்தமென்று கூறி காளிகா தேவி
கொல்ல வெளிநாட்டு தவிபெற்று காளிகா தேவி
நல்லவரென்று நடிக்கு மாட்சியரை காளிகா தேவி
எல்லா நாடும் நம்பும் வம்பு ஏனோ காளிகா தேவி.

27. சட்டதிட்டங்கள் எல்லாம் காளிகா தேவி
நாட்டை யாள்பவர்கள் சீதனமாம் காளிகா தேவி
ஒட்டுண்ணி எத்தர் கூட்டம் காளிகா தேவி
காட்டிக் கொடுத் தூட்டம் பெறுகிறாரே காளிகா தேவி.

28. சொல்லொண்ணா துன்பம் கண்டும் காளிகா தேவி
வல்லவளே நீ தூங்கலாமோ காளிகா தேவி
சத்துருக்களைச் சங்கரிக்க காளிகா தேவி
உக்கிரமர் வந்திடம்மா காளிகா தேவி.

காவடிப் பாடல்கள்

சூப்பு

1 புன்னகைப் பூப்பூத்து எழிலுடனே
புன்னைச் சோலை நிழல் வந்தமர்ந்த
அன்னை பத்திரகாளி அருளாட்சிதன்னை
வண்ணத்தமிழ் சொற்பூக்கள் தொடுத்து
வடிவமைத்து காவடிப் பாடல் பாட
எண்ணத்தில் ஏழையான் எண்ணியதை
திண்ணமுடன் முடிப்பதற்கருளளிக்க
அமிர்தகழி ஆனைமுகன் காப்பதாமே

2 மட்டுநகர் வடக்கே மைல் இரண்டில்
கட்டழகு பட்டண புன்னைச் சோலையிலே
பால்பொலியும் வெண்ணிலவு விண்ணைவிட்டு
கால்முளைத்து புன்னைச் சோலை பழையாறு
குளத்தருகே பவனி வந்தது போன்ற காட்சி
பெரியாரெனும் அடியார் நோக்கி
பேரொளியில் மயங்கியவர் தரணிசாய
பயப்படாதே பத்திரகாளி நானேயென்றாய்தாயே.

3 அன்னையே உன்னைக்கான அனுதினமும்
அடியார்கள் உன்பதியை நாடிவந்து
அகமதிலே உனையிருத்தி நாமமோதி
அன்புடனே ஆலயத்தை வலமும் வர

அணுகிடும் நோய்பிணிகள் நொடியில் தீர்த்து
அஞ்சாமை நெஞ்சத்தை அவர்க்குயீர்ந்து
அருளளித்து அடியவரைக் காக்கும் தெய்வம்
அவனியிலே உனையன்றி யாருமில்லையம்மா

4 ஆதியே சோதியாயுன் வடிவங்காட்டி
ஆலயத்தை அமைக்கவைத்து ஆரோகணித்து
ஆயியே பத்திரகாளி நானே என்று
ஆரியே ஊரவர்க்கு உரைத்தாயன்று
ஆரணியே ஆரணத்தின் வித்தகியே
ஆராதித்து அடிதொழு மன்பருக்கு
ஆண்டுதோறும் வேண்டும் வரமளிக்கும்
ஆதிசக்தியான காளி நீயேயம்மா.

5 இகபர இன்ப சுகமளிக்கு மிறைவிநீயே
இல்லார்க்கு எல்லாமருள் பவளும் நீயே
இம்பர்தொழு பத்திர காளிநீயே
இமயவில்லிதேவி இமயவல்லி நீயே
இடரிழைத்து எத்தர்கள் எமைவதைக்க
இரணபேரி இதயமதை ரணமாக்குதம்மா
இந்தவேளை எமைக்காக்க வந்துதவும்
இருடிகேசன் தங்கையாளே காளியம்மா

6 ஈழத்தமிழ் நாடெங்கும் கோவில்கள்
ஈஸ்வரியே உனக்கிருந் திட்டாலும்
ஈமத்தாடி தேவியே அத்தனைக்கும்
ஈடேற்ற மளித்தருளும் சிகரமதாய்

ஈன்றாளே புன்னைச்சோலைக் காளி
ஈடுகொடுக் குமன்னை நீயேயம்மா
ஈதுவெறும் பொய்யான புகழ்ச்சியல்ல
ஈனோர் நேரிடைகண்ட உண்மையம்மா

7 உலகினிலே அருவராகப் பிறந்ததன்றி
உலக அம்மையே வேறுதவறென்ன செய்தோம்
உயிரோவியமாக வாழ வேண்டிய எம்மை
உறுத்து முலுத்தரை உடனெதிர்க்கும்
உற்றவர் வெற்றிகான உறுதுணையான அன்னை
உன்னையே புன்னைப்பதி வாழும் காளி
உற்றதுனை யென்றோடி வந்தோமம்மா
உன்னருள் எங்களுக்குத் தாருமம்மா

8. ஊரவர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்
ஊழியம் செய்து ஆண்டுதோறும்
ஊழியான் பாரியாளே நிருவாகிகள் கூடி
ஊக்கமுடன் ஆனித்திங்கள் ஞாயிறன்று
ஊர் கூடி காளியுமை எழுந்தருளவைத்து
ஊறு பாடின்றித் திருக்கதவுதிறக்க
உற்றதுணை யென்றோடி வந்தோமம்மா
உன்னருள் எங்களுக்குத் தாருமம்மா.

9 எடுபிடிகள் பணம்வாங்கி ஊரை ஏய்க்க
எத்தர்கள் பதவிக்கா யிடம்மாறித் தூங்க
எட்டப்பராகி எக்காளமூதி அக்காளைவதை
எச்சிலாருக் கெலும் புக் குதவும்

எண்ணலரை மண்ணோடு சாய்த்து
எங்குலம் தழைக்க எங்களைக் காக்க
பொங்கருவியாக பொலியுமருள் கொண்டவளே
புன்னைச் சோலை யன்னையே வந்திடம்மா.

10 ஏந்திழை காளியேயுன் எல்லையிலே
ஏகதந்தன் தாயே மாரி, பேச்சி
ஏகன்துனையே பத்தினி, துரோபதை, காடேறி
வீரபத்திரர் வதனமா ரனுமன்
நீல சோதயன் காளி கலைகளோடு
நாகதம்பிரான் காவல் தெய்வங்களும்
நைவேத்திய பூசைகொண் டுச்சவவேளை
ஊர்காக்கு முன்படையணியம்மா.

11 ஐங்கரன் அன்னையே காளியாத்தா
பையரவம் சூடுபரன் பாரியாளே
கல்யாணக் கால்வெட்ட அமிர்தகழி
ஜயயேநீ பவனி வருகையிலே
வீதிதோறும் நிறைகும்பங்கள் நிறுத்த
அபிடேக ஆராதனையாக அனைத்துமேற்று
பூவரச மரக்கால் வெட்டிக்கட்டி
பூவையே புன்னகைத்து வருவாய்தாயே.

12 ஒற்றைக் கொம்பன்தாயே பற்றுடனே
ஒழுங்காகப் பூசையியற்றி மந்திரமோதி
உரிய முறைப்படி உரல் நிறுத்திப் பூசாரி
உலக்கை பற்றி நெல்குத்தும் வைபத்தை

கன்னிப் பெண்களிடம் கையளிக்க
மின்னலெனக் கண்ணிமைக்கும் நேரமதில்
எண்ணிலாக் கன்னிகுழாம் அரிசியாக்கு
முன்னருளை என்னவென்று சொல்வதம்மா.

13 ஓது கலை வித்தகியே உந்தனக்கும்
ஆடுதிக்கை ஆனை முகத்தனுக்கும்
குத்தரிசி கொண்டுதித்திக்க பொங்கலிட
செங்கரும்பு தேன்பால் பசுநெய்யுடன்
செம்பக வருக்கன் பலாச்சுளை கனிகளோடு
சிறந்த நற்சர்க்கரை கற்கண்டு சேர்த்து
பொங்கலிட்டுப் பூசை செய்து பூவும்தூவ
தங்கவைப்பாய் மங்களத்தை எங்கும்தாயே.

14 கடலேழு முன்வண்ணமம்மா எங்கு
காணிலும் உன்னுடைய அருளே மின்னுதம்மா
தங்கும் வெளியிற் கோடி யண்டம்
தாயுன் கைப்பந்தென ஓடுமம்மா
சுட்டுவிரற் கடைநீ தூக்கினாலே
எட்டுத்திக்கு முன்காலடியில் வீழ்ந்து
கட்டுண்டு சட்டென்று நின்றிடுமே
பட்டாடை பளபளக்கும் மழகி காளியம்மா.

15 சேராத கூட்டத்தில் சேர்ந்து நானும்
செறிவான புத்தியைத் தவறவிட்டு
ஆயகலை அற்புத வித்தைகளை
அவமதித்து அலைக்கழித்து நாளும்

தூயவளே அருட்கடலே தொல்மறையை
தாயவளே தப்பிதமாய் தூக்கியெறிந்தேன்
நேரிழையே ஏழையென் பிழை பொறுத்து
மடியணைத்து வாழவழி செய்தாய் தாயே.

16 எருக்கிலை வெட்டிவர ஏந்திழையே
அமிர்தகழி கிராமத்திற்கு புகுவழிதோறும்
மாவிலை மகர தோரணங்களாட
மங்கள கும்பங்கள் நிறைந்திருக்க
தேவராளர் அபிடேக ஆராதனையாயேற்று
தெய்வீக வாக்கதனா லாசி கூறி
எருக்கிலை சதுரக்கள்ளி மடைகள் கட்டி
விருப்போடு உருக்கொண்டாடி வருவார்தாயே.

17 வரும்வழியே பெருவித்தை கற்றவர்கள் கட்ட
அருளோடு பூசகர்க ளனைத்தையும் வெட்ட
உருக்கொண்டாடு தேவராளர் கோபாக்கினியின்றி
தாயாக விருந்து தயைவைத்துக் காத்து
புன்முறுவல் பூத்தெருக்கலையால் தீக்குழியை
சுத்திசெய்து அம்பாள் முன் புதைத்து
ஆலைவிழுதுகளால் கால்கள் நட்டு
விநாயகப் பானை தனைவைப்பார்தாயே.

18 தீக்குழிசுத்தப் படுத்தி நான்கு மூலையிலும்
நீக்கமற நிறைவுடனே தேவராளருக்கு
மடைகட்டி கோழிப் பலியுமிட்டு
தடையின்றி தாயாருக்கு பூசைமுடித்து

அம்பாளி னடையாளம் தீக்குழியில் வைத்து
ஆலயதிரைச் சீலை நீக்கி யுன்கண் பார்வையிலே
எருக்கலை சதுரக்கள்ளி கொண்டு
தீமூட்டி தீ வளர்ப்பார் களம்மா

19 செம்பவழங்கள் பதித்திட்ட தரையதாக
தீக்குழி செப்பனிடு மழகுகாண
எண்ணற்ற ஆயிரம் பக்தர்கூடும்
காட்சியின் மாட்சி வேறாலயத்தே
காண்பதரி தென நான் இயம்புவது
வீம்பல்ல நிதர்சனமான உண்மையம்மா
செம்மையுறு இவ்வாலய சிறப்பினெல்லை
தரிசித் தருள்பெற்றோர் கூறும் சான்றுதாயே.

20 அத்திமுகன் அன்னையே யுன் ஆலயத்தே
மெத்த மனப் பக்தியுடன் மிகுதியான
பக்திவெள்ளம் கொப்பளிக்க பரபக்தியோடு
பத்திரம் பற்றி பாலரோடு விருத்தர் கூடி
சங்கற்பம் பூண்டுசங்கரியுன் வாசலிலே
தவங்கிடந்து தீமிதிக்கும் காட்சி
அங்கமெலாம் புளகாங்கித மாக்கி
சென்னியிலே செப்பிடு முன் திருவின் மாட்சி.

21 அன்னசாலை அன்னமுண்ண அடியவரை
ஆலயத் தொண்டர் அன்போடணுகி
பண்போடு பரிமாறிப் பசிகளைந்து
இன்முகத்தோ டுபசரித்து தாகம் தீர்த்து

அன்றிரவு ஆயுத அடையாளங்களை
நீலா சோதயனிட மொப்படைத்து வணங்கி
குற்றம் குறை பொறுக்க கழலிறஞ்சி
அன்னையே நின் திருக்கத வடைப்பாரம்மா.

22 நரசிங்க வைரவர்க்கு பூசையியற்றி
மறுவாண்டு வரைகாவலில் நிறுத்தி
பாலூற்றித் தீக்குழி யணைத்து திரி
சூலமது தீக்குழியெல்லை சுற்றி நட்டு
வெள்ளி தோறும் பொங்கல் பூசையோடு
பூரணை நாள்தோறும் பூசை கொள்ளும்
புன்னைச் சோலைக்காளி யுன்புகழை
என்னால் எடுத்தியம்ப முடியாதம்மா.

தரு

தந்தனத்தானானா - தனான
தந்தனத் தானானா
தந்தனத் தானானா - தனான
தந்தனத் தானானா

1. புன்னைச் சோலைக் காளி - சிறப்பை
செந்தமிழிலே பாடுதற்கு
புத்தியில் வந்து நின்று - கணபதி
சித்தி நீ தந்திடையா.

2. புன்னைச் சோலை காளியாத்தா - மக்கள்
எண்ணமெல்லாம் பூத்தா
என்பதற்குச் சாட்சி - அங்கே
பொங்கும் அருளாட்சி.

3. புன்னைச்சோலை நிழல்தனிலே - ஆத்தா
வண்ணப் பொலிவுடனே
எண்ணற்ற உருவெடுத்து - சிங்கத்தி
லேறியுலா வருவா.

4. மட்டுநகர் வாவி - ஓடித்
சங்கமிக்கும் கடல் கிழக்கே
தட்டும் தவிலோசை கேட்டு - குத்தி
மிதித்துச் சதிராடும்.

5. சோலைக் குயில் பாடும் - கேட்டு
தோகை மயில் ஆடும்
காவின் கிளைதாவி - கவி
இனமும் நடமாடும்.

6. தங்க நிறத்தழகி - காளி
குங்குமப் பொட்டழகி
சிங்க வாகனமேறி - பொங்கும்
மங்களம் தந்திடுவாள்.

7. கூடும் கோடியடியவர்க்கும் - காளி
பாடும் பாவானருக்கும்
நாடும் வரமளிக்க - ஆத்தா
தேடி ஓடி வருவா.

8. வேப்பிலை கைபிடித்து - காளி
வேதனை தீர்க்க வாறா
கூப்பிக் கரம் தொழுதா- ஆத்தா
தூக்கித் துயர் துடைப்பா.

9. ஆடிடும் காவடிகள் - அன்னைக்
காயிர மாயிரமாம்
பாடிடும் பாயிரங்கள் - காளிக்கு
கோடி அபிடேகமாம்.

10. புன்னை மர நிழலாம் - சுற்றி
பொன்னான மண் பரப்பாம்
கண்ணயர வைக்க - தென்றல்
சாமரம் வீசிடுமாம்.

11. பூரணை நாளினிலும் - காளிக்கு
பூசை புனக்காரமாம்
பூச்சாத்தி வழிபடவே - கூடும்
பூவையர் ஏராளமாம்.

12. வெள்ளிக் கிழமை தோறும் - மாலை
பொங்கல் பூசைகளாம்
எள்ளு விழக்கூட இடமின்றிக் - கூட்ட
மெங்குமலை மோதும்.

13. உற்சவ காலத்திலே - காளிக்குப்
பற்பல நேர்த்திகளாம்
கற்பனை இல்லை எல்லாம் - ஆத்தா
அற்புத லீலைகளாம்.

14. தீக்குழியைச் சுற்றி - நேரான
திரிசூல வேலியதாம்
நோற்பு முடிச்சாக வரம் - வேண்டி
நேர்த்தி முடிச்சுகளாம்.

15. சங்கேந்திச் சமர்புரிந்த - காளி
சங்கரன் சங்கரியே
மங்கள விளக்கேந்தி - வாறோம்
மாவீரம் தந்திடம்மா.

16. வெற்றி மாலை சூடும் - அன்னை
வீரமா காளியரே
உற்றவர் வெற்றி பெற - என்றும்
உறுதுனை நீயேயம்மா.

17. அடியவர் அகமதிலே - குடிகொண்ட
அற்புத காளியே நீ
நெறி தவறாது வாழும் வாழ்வை
நிச்சயம் தந்நிடம்மா.

18. மகுடம் தரித்தவளே - உயர்
பீடம் அமர்ந்தவளே
பொற்பாதம் பணியும் எமை
கற்பகமாய் காத்திடம்மா.

19. திருக் கையபய மளிக்க - திரு
வினை வரதம் நல்க
அருமறை அன்னையரை - தினம்
கருதியே கைதொழுவோம்.

20. வேப்பிலை மோதும் தென்றல் வந்து
மேனி தடவையிலே
விடுபட்ட வில்லின் கணையாய்
வேதனை ஓடுதுபார்.

21. சத்திய நாயகியாள் - காளி
சன்னிதி வீதியெங்கும்
மின் விளக்கினொளி கண்டு - வின்
மீன்கள் மயங்கிடுமாம்.

22. கருப்பூர தூமம் கண்டு - பெரும்
காரெனக் கவிகளஞ்சி
மரக்கிளை தாவிப்பாஞ்சி
மழையெனத் தமை மறைக்கும்.

23. தீக்குழிச் செம்மை கண்டு - சீரான
செங்கம்பள விரிப்பதென்று
தல விருட்ச கிளையசைந்து - பூமாரி
பொழிந்து வாழ்த்திடுமாம்.

24. பாவணர் பாட்டொலியும் - நா
வாணர் வாக்கருளும்
தீமித்திடு பக்தருக்கு - பக்தி
பரவச மூட்டிடுமாம்.

25. கிள்ளை மொழி பேசும் - அன்பு
பிள்ளை வரம் வேண்டி
நோன்பு நோர்த்து நேர்த்தி - கட்ட
புன்னைக் காளி வரமளிப்பா (ள்).

26. தீயில் பிறந்திட்ட - காளி
கோவிலில் தீமிதிக்க
பூமித்தடியாக பூவை - காளி
பூக்குமே காத்தீடுவா (ள்).

27. வலது கைவாளாலே - அசுர
குலமழிக்கு மாத்தா
அழுது தொழுது நின்றா - என்றும்
பழுதின்றிக் காத்திடுவா (ள்)

28. தீச்சட்டி கையேந்தி - காளி
தீமையைச் சுட்டெரிப்பா (ள்)
பூப்போட்டுப் பணிபவரை - என்றும்
பூவாகவே காத்திடுவா (ள்).

29. பட்டாடை பளபளக்க - காளி
நத்தனம் ஆடிடுவா (ள்)
கொட்டும் குரவையொலி - கேட்டு
மிக்க மகிழ்ந்திடுவா (ள்).

30. உடுக்கின் ஒலி கேட்டு - காளி
மிடுக்குடன் வந்திடுவா (ள்)
கடுத்திடும் நோய்நொடியை - அவ
தடுத்து நிறுத்திடுவா (ள்).

31. அன்ன சாலை அன்னமுண்ண -அன்பரை
அன்போ டழைக்கும் நட்பு
புன்னைச் சோலை நிருவாகத்தின் - உயர்
தனித்துவ மான பண்பு.

32. வந்தனம் செய்திடுவோம் - அவமேல்
தந்தனம் பாடிடுவோம்
செந்தூர மணத்தழகி - நம்மை
வந்துமே காத்திடுவா (ள்).

ஆக்கம்
கவிஞர் ஆரையூர் அருள்

திரு. மு. அருளம்பலம் (அதிபர்)
"துளசிவாசம்"
ஆரையம்பதி - 01
ஆரையம்பதி.

முழுப்பெயர் :- திரு.மூத்ததம்பி அருளம்பலம்

புனைப்பெயர் :- ஆரையூர் அருள்

தகைமை :- பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்

பதவி :- பாடசாலை அதிபர்

கலைத்துறையில்: ஆரையூர் அருள் விளம்பரம் எதுவும் தேவைப்படாத அல்லது தன்னை விளம்பரம் செய்து கொள்ள விரும்பாத ஒரு சிறந்த பல்கலை விற்பன்னர் ஆவார். அவரது அகவை பதினைந்திலிருந்தே தான் சார்ந்திருக்கும் இடங்களிலெல்லாம் அப்போதைக்கப்போது தமது திறமைகளை வெளிப்படுத்தி வந்த போதும் கலைக்கழகங்களோ வேறு பொது நிறுவனங்களோ கண்டு கொள்ளாதது துரதிஷ்ட வசமாகும்.

அன்னாரால் தயாரிக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் 1997ம் 1998ம் வருடங்களில் அடுத்தடுத்து இரண்டு முதலாம் பரிசுகளை பெற்றுக் கொண்டன என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டியதோடு, 1998ல் முதன்முதலாக நடாத்தப்பட்ட மண்முனைப்பற்று பிரதேச சாகித்திய விழாவின் போது நடைபெற்ற நாட்டுக்கூத்துப் போட்டியில் அவரால் தயாரித்து நெறியாள்கை செய்து "சாவித்திரி" வேடமேற்றும் நடித்த "மறலியை வென்ற மங்கை" தென்மோடிக் கூத்து முதலாமிடத்தைப் பெற்றதும் அன்னாரின் அனைத்து கலைத்திறனுக்கும் சான்று பகரும். அன்றியும் 1992, 1994ஆம் ஆண்டுகளில் "வழிதவறிய வஞ்சி" "மங்கள தீபம்" போன்ற நவீன நாட்டுக் கூத்துக்களை மண்வாசனை வீசும் வகையில் வடமோடியில் தயாரித்தும் இயக்கியும் தானே பாத்திரமேற்று நடித்ததோடு 1993ல் "அனுமன் கண்ட சீதை" வடமோடியில் சீதையாக பாத்திரமேற்று நடித்ததோடு தயாரித்து நெறியாள்கை செய்ததும் அவரே. "அவள்" என்ற சிறு கதைக்கு புலவர்மணி போன்ற பெரியவர்களின் பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார்.

மேலும் நாட்டார் பாடல்கள், நாடகங்கள், சிறுகதைகள், கும்மி, சிந்து, தாலாட்டு, காவடிப்பாடல்கள் போன்ற இவரது கலைப்படைப்புக்கள் அவ்வப்போதைக்கு இலங்கை வானொலியிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்ததுடன் தமிழீழத் தலங்கள் தோறும் ஒலிப்பேளைகளாக உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன. 2001ஆம் அண்டு மட்/கல்லடி உப்போடை பேச்சியம்பாளைப் பற்றிய பக்திப் பரவசமூட்டும் இனிய பாடல்கள் பலவற்றை இயற்றி நூலாகவும், ஒலிப்பேளையாகவும் முதன்முதலில் மட்டக்களப்பில் வெளியிட்ட பெருமையும் ஆரையூர் அருள் அவர்களையே சாரும். கோளாவில் முத்துமாரி அம்பாளின் பக்திப் பரவசம் சொட்டும் ஒலிப்பேளைகளையும் இவரின் ஆக்கம் என்பது அகம் இனிக்கும் அரும் படைப்பாகும்

அருகிவரும் நாட்டுக்கூத்துக் கலையினை வடமோடி, தென்மோடி, நவீன நாட்டுக்கூத்துக்களாக தயாரித்து இயக்கும் ஆற்றல் கொண்ட மட்டக்களப்பின் ஒரேயொரு கலைஞரைக் கௌரவிப்போம் - பயன்பெறுவோம்.

திரு.எம். தங்கவடிவேல் (அதிபர்)
மட்/ஆரையம்பதி ம.வி.

எவகிறீன் அச்சகம் - மட்டுநகர். ✆ 065- 2222607